மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. வீ. மலைக்கண்ணன் : இனிமேலாவது அப்படிச் செய்ய அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாம் பல்கலைக் கழகத்தைக் கேட்டுக்கொள்ளலாம், அவர்கள்தான் முடிவு செய்யவேண்டும்.

Meeting of Inter-Media Publicity Co-ordination Committee.

*Q 274—Thiru R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :—

(*a*) whether the Inter-Media Publicity Co-ordination Committee in Tamil Nadu met during June 1973 in Madras ; and

(*b*) if so, the details of the decisions taken?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :

(அ), & (இ) : பிரச்சார ஒருங்கிணைப்புக் குழுவானது (Inter-Media Publicity Co-ordination Committee) இந்திய அரசால் அமைக்கப்பட்ட ஒன்றாகும். 1973 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நடைபெற்ற அதன் கூட்டத்தில் இந்திய அரசின் பொதுத் துறை நிறுவனங்கள்பற்றிச் செவ்விய முறையில் பிரச்சாரம் செய்ய வேண்டிய தேவை குறித்து விவாதிக்கப்பட்டது. ஆனால் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

சிரணிப் பணிகளுக்கான செலவு.

*வினா 275 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழகத்தில் 1972-73 ஆம் ஆண்டில் சீரணிப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ? மாவட்ட வாரியாக ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : 1972-73 ம் ஆண்டில் சீரணித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் செலவிடப்பட்ட தொகை ரூ. 12,24,377.

மாவட்ட வாரியாக செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு :—

மாவட்டம்.	செலவான தொகை.
	ரூ.
1 வட ஆற்காடு	1,06,893
2 தென் ஆற்காடு	82,238
3 சேலம்	1,10,000
4 கோயம்புத்தூர்	95,598
5 திருச்சிராப்பள்ளி	98,624
6 தஞ்சாவூர்	1,12,500
7 இராமநாதபுரம்	98,239
8 மதுரை	92,324
9 செங்கல்பட்டு	89,135
10 திருநெல்வேலி	94,448
11 தருமபுரி	77,484
12 நீலகிரி	46,600
13 கன்னியாகுமரி	57,259
14 சென்னை	63,035

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த சீரணிப் படையிலே எத்தனை பெண்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று அரசு தெரிவிக்குமா ? குறிப்பாக, பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் அரிசனங்களுக்கும் ஏதாவது சலுகை அளிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஆண்கள் 41,499 ; பெண்கள் 2,042. அவர்களுக்கு, மற்றவர்களுக்கு அளிக்கப்படுவதைப் போல், சலுகைகள் அளிக்கப்படுகின்றன. அம்மையார் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், அதனை ஆராய்ந்து விவரமாகச் சொல்லப்படும்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether any building construction works have been taken up out of this amount ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : பஞ்சாயத்து யூனியன் அமைக்கும் கட்டிடங்களுக்கு சீரணித் தொண்டர்கள் உடனிருந்து உதவி செய்கின்றனர். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த சீரணிப் படைக்கு 1972-73லே ரூ. 12 இலட்சம் செலவழிக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1973-74 லே இது தானாகவே இயங்கும் படையாக இருக்கிற காரணத்தால், செலவு குறைந்திருக்கிறதா ? அப்படி என்றால், எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : செலவு ஒன்றும் குறையவில்லை. மேற்கொண்டு, இன்னும் செலவிடத் திட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அவைகளை விரைவில் ஆராய்ந்து நிறைவேற்றலாம்.

திரு. எம். சுரேந்திரன் : சீரணிப் படைக்குச் செலவிடப்படுகிற பணத்திற்கும், அவர்களால் செய்யப்படுகிற பணிகளுக்கும் மதிப்பீடுகள் போடப்பட்டிருக்கிறதா ? தனியாருக்கு அளித்தால் ஆகும் பணிகளைவிட, அதிகப் பணிகள் இவர்களால் ஆகியிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, சீரணிப் படையின் மூலமாகச் செலவழிக்கிற பணத்திற்கும், தனியார் காண்ட்ராக்டின் மூலம் செய்கின்ற பணிக்கும் வித்தியாசம் இல்லை என்று சொல்லுகிறார்களே, அது சம்பந்தமாக அரசு ஏதாவது பரிசீலனை செய்து முடிவு எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்பொழுது தகவல் இல்லை. கனம் உறுப்பினர் தெரிவித்த கருத்தை நினைவில் வைத்து அதுபற்றி ஆவன செய்ய முயற்சிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சீரணிப்படையிலே இருக்கிற பெண்கள் என்ன பணிகள் செய்கிறார்கள் என்பவை அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : சீரணியினுடைய கருத்தை நிறைவேற்றும் வகையில் அவர்கள் பணியாற்றுகிறார்கள். குறிப்பாக, பள்ளிக்கூடங்களை அமைப்பது, துப்புரவுப் பணிகளைச் செய்வது போன்ற பணிகளில் ஈடுபாடு கொண்டுள்ளனர்.

அரிசனங்களுக்கு சிறு தொழில் நடத்தக் கடன்கள்.

*276 வினா : திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1972-73-ம் ஆண்டில் சிறு கைத்தொழில் செய்ய அரிசன மக்களுக்கு கொடுத்த கடன் தொகை, அதைப் பெற்றவரின் விவரங்கள் யாவை ?